## 1. தமிழகத்தின் அன்னிபெசன்ட் அம்மையார் (மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்)

- அம்மையார் கதிராடையை ஊர் ஊராகக் கொண்டு சென்று விற்றார். தேவதாசிகளை கதறாடை அணியச் செய்தார். கதர் அணிந்தவர்கள் உள்ளே வரவும் என எழுதப்பட்டிருந்த விளம்பர பலகையை தன் குடிசை வாசலில் தொங்க விட்டிருந்தார்.
- தீண்டாமை, தேவதாசி முறை, குழந்தை திருமணம், மறுப்பு, கைம்மை நோன்பு ஒழிப்பு முதலிய சமூகக் கேடுகளை எதிர்த்து அம்மையார் போராடினார்.
- மேலும் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட ஒரே பெண்மணியும் இவர்தான்.
- தேவதாசி முறையை ஒழிக்கப் பாடுபட்ட அம்மையார் மேடை முழக்கங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.
- இதனை ஏற்காத தலைவர்கள், செல்வர்கள், இளைஞர்கள் நாடக மேடை ஏறி அம்மையாரின் கூந்தலை பிடித்து அறுத்தெறிந்தனர்.
- அதனை அம்மையார் பொருட்படுத்தாமல் முழுமூச்சாய் செயலாற்றினார். பெரியார், திரு. வி.க, வரதராசுலு, தர்மாம்பாள், நீராம்பிகை, மலர் முத்தம்மையார், தாமரை கன்னியம்மையார், போன்றோர் அம்மையருடன் இணைந்து தேவதாசி முறையை ஒழிக்க இணைந்து போராடினார்கள்.
- அம்மையார் 1938 இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு திணிப்பு போராட்டத்தில் பங்கு கொண்டார்.
- போராட்டத்தின் போது திருச்சி உறையூர் முதல் சென்னை வரை 42 நாள் 527 மைல் தூரம் நடை பயணம் மேற்கொண்டார்.
- நடை பயணத்தின் போது 87 பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.
- இந்தி எதிர்ப்பு போராட்டம் பேரணியில் நடந்து வந்த ஒரே பெண் இவர் மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

- தமிழ்நாட்டில் காணப்பட்ட கொடிய பழக்கமான தேவதாசி முறையை ஒழிக்க தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தார்.
- தேவதாசி முறை ஒழிப்பில் ஆர்வம் கொண்டிருந்ததால் மகாத்மா காந்தி இவரது சமூக பணிகளை பாராட்டி பேசினார்.

| | |
|---|---|
| **பெற்றோர்** | நாராயணசாமி – சந்திரம்மாள் |
| **ஊர்** | புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திருகோக்கர்ணம் |
| **காலம்** | 30.07.1886 முதல் 22.07.1968 வரை |
| **சிறப்பு** | ➢ தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.<br>➢ இந்திய பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்,<br>➢ சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர்,<br>➢ சட்ட மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி. |
| **விருது** | மத்திய அரசின் பத்ம பூஷன். |

- இந்தியாவில் மருத்துவ துறை படித்த முதல் பெண் ஆவார்.
- அவர் 1949 ஆம் ஆண்டு புற்றுநோய் மருத்துவமனையை நிறுவினார்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- காந்தியடிகளின் உதவியுடன் தேவதாசி முறையை ஒழிக்க போராடினார்.
- 1929 ஆம் ஆண்டு அவர் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.
- தந்தை பெரியார் திருவிக்க கல்யாண சுந்தரனார் உதவியுடன் தேவதாசி முறையை எதிர்த்து போராடினார்.
- இதன் விளைவாக நீதி கட்சி அரசாங்கம் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றியது.
- 1930–ம் ஆண்டு பூனாவில் அனைத்திந்திய பெண்கள் மாநாட்டை நடத்தினார்.
- 1933 முதல் 1947 வரை இடையில் இரு வருடங்கள் தவிர தொடர்ந்து இந்திய மாத சங்கத் தலைவியாக இருந்தார்.
- அவர் சென்னையில் அவ்வை இல்லம் என்ற அனாதை நிலையத்தை சார்ந்தவள் தொடங்கினார்.
- அவர் 1968 ஆம் ஆண்டு தனது 82 ஆவது வயதில் இந்த உலக வாழ்வை திறந்தார்.

⇒ **<u>கலந்து கொண்ட போராட்டங்கள்</u>**

- ✓ இந்தி மொழி எதிர்ப்பு
- ✓ தமிழாசிரியர்களின் ஊதிய உயர்வு போராட்டம்.

⇒ **<u>சாதனைகள்</u>**

- ✓ தேவதாசி ஒழிப்புச் சட்டம்,
- ✓ இருதார தடைச் சட்டம்,
- ✓ பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டம்,
- ✓ குழந்தை திருமணச் சட்டம்

ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர்.

- அடையாற்றில் 1930 ஔவை இல்லம் 1952–இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

### 3. <u>தில்லையாடி வள்ளியம்மை</u>

- தில்லையாடி வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் 1898 ஆம் ஆண்டு முனுசாமி மங்கலம் இணையறுக்கு மகளாய் பிறந்தார்.
- வள்ளியம்மையின் தந்தை ஒரு நெசவாளி நெசவுத்தொழில் பாதிப்பால் தென்னமெரிக்காவிற்கு சென்று ஜோகன் ஸ்பார்க் என்னும் நகரத்தில் சிறிய அளவில் காய்கறி கடை ஒன்றை நடத்தி வந்தார்.
- தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் வாழ்வுரிமையை மீட்க காந்தியடிகள் போராடினார் அப்பொழுது காந்தியடிகள் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை வள்ளியம்மை இளமையிலே அறப்போரில் ஈடுபட காரணமாயிற்று.
- 1913 ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் நாள் வாழ்த்து எனும் இடத்தில் நடைபெற்ற அறப்போரில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார்.
- அவருக்கு தென்னாபிரிக்கா நீதிமன்ற மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது.
- சிறையில் சுகாதாரமிலாத உணவு போதிய மருத்துவ வசதியின் ஆகிய காரணங்களால் பாதிக்கப்பட்ட வல்லமை உயிருக்கு போராடினார்.
- உடல் நலம் குன்றிய நிலையில் விடுதலை செய்யப்பட்ட வல்லியமையை சந்திக்க காந்தியடிகள் சென்றார்.
- அப்போது காந்தியடிகள், வள்ளியம்மையிடம் சிறை தண்டனைக்காக நீ வருந்துகிறாயா? என கேட்ட பொழுது, அந்த நிலைமையிலும் வள்ளியம்மை இல்லையில்லை மீண்டும் சிறை செல்ல தயார் இந்தியர்களுக்காக எத்தகைய இன்னல்களையும் ஏற்பேன் என் இன்னுயிரையும் தருவேன் என்று கூறினார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- உயிருக்கு போராடிய வலிமை 1914 பிப்ரவரி 22 ஆம் நாள் அன்று தனது பதினாறாம் அகவையில் மரணம் அடைந்தார்.

⇒ **வள்ளியம்மை குறித்து காந்தியடிகளின் கூற்று**

- என்னுடைய சகோதரியின் மரணத்தை விடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்கு பேரிடியாக இருந்தது, என்று மனம் வருந்தினார்.

⇒ **இந்தியன் ஒபினியன் இதழில் காந்தியடிகள் எழுதியது**

- துன்பத்தை தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இலக்கணமாக திகழ்ந்த அவருடைய தியாகம் வீண் போகாது.
- சத்தியத்திற்காக உயிர் நீத்த அவருடைய உருவம் என் கண்முன் நிற்கிறது. நம்பிக்கை தான் அவரது ஆயுதம்.

⇒ **தென் ஆப்பிரிக்கச் சத்தியாகிரகம் என்னும் நூலில் காந்தியடிகள் எழுதியது**

- தென் ஆப்பிரிக்கா வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்.

⇒ **அரசு செய்த சிறப்புகள்**

- தமிழ்நாடு அரசு தில்லையாடியில் வல்லியமையின் சிலையை நிறுவியுள்ளது.
- **கோ–ஆப்–டெக்ஸ்** என்று அழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் சென்னையில் உள்ள தனது 600 ஆவது விற்பனை மையத்திற்கு தில்லையடி வள்ளியம்மை மாளிகை என்று பெயர் சூட்டியுள்ளது.
- நடுவன அரசு தில்லையடி வள்ளியம்மை நினைவே போற்றி அஞ்சல் தலையில் அஞ்சல் உரையும் வெளியிட்டுள்ளது.

⇒ **கூடுதல் தகவல்கள்**

- தில்லையாடி நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருக்கடையூருக்கு தெற்கே மூணு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.
- சென்னை வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த பெண் புலிக்குட்டிக்கு வள்ளியம்மை நினைவாக வள்ளி என பெயரிடப்பட்டுள்ளது.
- காந்தியடிகள் தமிழர் மீதும் தமிழ் மொழியின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு வல்லியமையும் ஒரு காரணம் என்று கூறலாம்.

## 4. இராணி மங்கம்மாள்

- மதுரை ஆண்டு வந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி ராணி மங்கம்மாள்.
- மதுரையை இவர் காப்பாட்சியாளராக இருந்து ஆண்டு வந்தார்.
- தன் கணவர் இறந்தபோது மகன் சிறு குழந்தையாக இருந்ததால் தான் உடன்கட்டை ஏறவில்லை.
- மகன் முத்து வீரப்பன் பதவிக்கு வரும் வரை திறமையாக ஆட்சி செய்தார்.
- பின்னர் 7 ஆண்டு காலம் ஆட்சி செய்து முத்து வீரப்பன் இறந்துவிடவே, ராணி மங்கம்மாள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- மகன் இறந்தபோது மருமகள் கருவுற்றிருந்ததால் மருமகளையும் அவர் உடன்கட்டை ஏற விடவில்லை.
- மங்கம்மாளின் பெயரன் விசியரங்க சொக்கநாதன் அரியனை ஏறும் வரை மீண்டும் ஆட்சி பொறுப்பினை மங்கம்மாள் ஏற்றார்.
- பலவிதமான துயரங்களை மனதில் தாங்கிக் கொண்டு ஆட்சி கடமைகளை சரிவர நிறைவேற்றிய வீராங்கனை ஆவார்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ **இராணி மங்கம்மாள் நடத்திய போர்கள்**

**1. திருவிதாங்கூர் போர்**

- மதுரை நாயக்கர் அரசுக்கு திரை செலுத்தி தவறிய திருவிழா மன்னர் ரவிவர்மா கல்குளம் பதவியில் இருந்த நாயக்கர் படையை அழித்தார்.
- அதனால் தளபதி நரச பையன் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர் படையை தோற்கடித்து திரை பொருள் மற்றும் பீரங்கி முதலிய பொருட்களை பெற்றுச் சென்றது.

**2. தஞ்சைப் போர்**

- தஞ்சை ஆண்ட மராத்திய மன்னர் ஷாஜி மதுரை நாயக்கர்கள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகள் சிலவற்றை கைப்பற்றினார்.
- தளபதி நரச பையன் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை தங்கள் பகுதிகளை மீட்டது.
- தஞ்சை அமைச்சர் பாலாஜி பண்டிதர் ராணி மங்கம்மாளின் படைகளிடம் பெரும் பொருள்களை கொடுத்து அனுப்பினார்.

**3. மைசூர் போர்**

- காவிரியின் குறுக்கே அணை கட்டிய மைசூர் மன்னன் சிக்கதேவராயன் மீது படையெடுத்துச் சென்றார்.
- படைகள் போருக்கு தயாரான போது கர்நாடக பகுதியில் பெரு மலை ஏற்பட்டு அணை உடைந்ததால் போர் ஆரம்ப நிலையிலேயே முடிவுற்றது.

⇒ **இராணி மங்கம்மாளின் அறப்பணிகள்**

- மதுரையில் பெரிய அன்ன சத்திரத்தை கட்டினார்.
- பல புதிய சாலைகளை அமைத்தார்.
- கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை மங்கம்மாள் சாலை எனப்படுகிறது.
- குதிரைகள் பசுக்கள் காளைகள் முதலில் விலங்குகள் நீர் அருந்துவதற்காக வசதியாக சாலையோரங்களில் தண்ணீர் தொட்டிகள் இவர் காலத்தில் திறக்கப்பட்டன.
- குடிநீர் குளங்கள் ஊறுனிகள் கிணறுகள் தோண்டப்பட்டன.
- கொள்ளிடத்தில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துன்புற்ற போது அவர்களுக்கு உணவு உடை உறையுள் வழங்கினார்.
- வெள்ளத்தில் அறிந்த சிறு சிற்றூர்களை சீரமைத்தார்.
- தொழில் வளர்ச்சி வணிகம் மக்கள் தொடர்பு மிக சிறந்து விளங்கியது.
- இன்று மதுரையில் செயல்பட்டு வரும் மத்திய சந்தை மதுரை கல்லூரி உயர்நிலைப் பள்ளி கட்டிடம் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் பழைய அலுவலகம் போன்றவை ராணி மங்கம்மாள் காலத்தில் அவரால் கட்டப்பட்டவை ஆகும்.

⇒ **இந்திய விடுதலைப் போரில் தமிழகப் பெண்களின் பங்கு**

**1. வேலு நாச்சியார்**

| | |
|---|---|
| **பெற்றோர்** | ராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதி – சக்கந்தி முத்தாத்தாள் |
| **பிறந்த ஆண்டு** | கி.பி. 1730 |
| **கணவர்** | சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர். |

- கி.பி. 1722–ல் ஆங்கிலே சிவகங்கை சீமையின் மீது படையெடுத்தனர்.
- ஆங்கிலேயருக்கும் முத்து வடுக நாதருக்கும் இடையே நடைபெற்ற கடுமையான போரில் முத்து வடுகநாதர் வீரமரணமடைந்தார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- தன் கணவர் மரணம் அடைந்ததும் வேலு நாச்சியார் மைசூர் மன்னர் ஹைதர் அலி கொடுத்து உதவிய 5000 படை வீரர்களுடனும் மருது சகோதரர்களுடனும் அப்படைக்கு தலைமை ஏற்றுச் சென்று ஆங்கிலேயருடன் போர் புரிந்தார்.
- அப்போரில் கணவரைக் கொன்றவர்களை வென்று 1780– இல் சிவகங்கையை மீட்டார்.
- அறிந்திருந்த மொழிகள் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச், உருது.
- வேலுநாச்சியார் ஹைதர் அலியுடன் உரையாடிய மொழி உருது. சிலம்பம், குதிரை ஏற்றம், வால் போரில் பயிற்சி ஆகியவற்றை முறையாக கற்றுக் கொண்டவர்.
- அவரின் படையில் ஆண்கள் படை பிரிவிற்கு மருது சகோதரர்களும், பெண்கள் படை பிரிவிற்கு குயிலும் தலைமை ஏற்றிருந்தனர்.
- ஆங்கிலேயரிடம் வேலு நாச்சியரை காட்டிக் கொடுக்க மறுத்து உயிர்விட்ட **உடையாள்** என்ற பெண்ணிற்கு அவரால் நடுகல் நடப்பட்டது.
- சிவகங்கையை மீட்பதற்கு முன்பு காளையார் கோயிலை கைப்பற்றினர்.
- வேலுநாச்சியார் படை வெல்வதற்காக தன் உடலில் தீ வைத்துக் கொண்டு ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்குகளில் குதித்து தன் உயிரை தியாகம் செய்தவர் குயிலி.
- வேலு நாச்சியாரின் காலம் 1730 – 1796
- ஜான்சி ராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீர போர் புரிந்தவர் வீரமங்கை வேலுநாச்சியார்.
- இவரின் அமைச்சர் தாண்டவராயன்.
- சிவகங்கையை அவர் மீட்ட நாள் விஜயதசமி.

## 2. <u>கடலூார் அஞ்சலை அம்மாள்</u>

- இவர் கடலூாரில் உள்ள முதுநகரில் 1890 இல் பிறந்து வளர்ந்தார்.
- 1921ல் காந்தியடிகள் ஒத்துழையாம இயக்கத்தை தொடங்கிய போது இவரும் பொது வாழ்க்கையை தொடங்கினார்.

⇒ **<u>அஞ்சலை அம்மாள் கலந்து கொண்ட போராட்டங்கள்</u>**

- நீலன் சிலை அகற்றும் போராட்டம்.
- உப்பு காய்ச்சும் போராட்டம்.
- தனியாள் போராட்டம்
- வெள்ளையனே வெளியேறு போராட்டம்.

⇒ **<u>அவர் சிறையில் இருந்த இடங்கள்</u>**

- கடலூார், திருச்சி, பெல்லாரி,வேலூர்.
- வேலூர் சிறையில் இருந்த போது அவர் கரூற்று நிலையில் இருந்ததால் ஆங்கிலேயர் அரசு அவரை சில காலம் வெளியே அனுப்பிவிட்டு மகப்பேட்டிற்கு பின்னர் மீண்டும் சிறையில் எடுத்தது.
- சென்னை உட்பட்ட பல நகரங்களுக்கும் சென்று தனது அனல் பறக்கும் பேச்சாள் விடுதலை இயக்கத்திற்கு தடை செய்தார்.
- தன் குடும்ப சொத்துக்களின் குடியிருந்த வீட்டையும் வீற்று விடுதலை போராட்டத்திற்காக செலவு செய்தார்.
- நீலன் சிலை அகற்றும் போராட்டத்தில் தம்முடைய ஒன்பதாவது வயது மகள் அம்மா கண்ணுவையும் ஈடுபடுத்தியதால் தாயும் மகளும் சிறை சென்றன.
- சிறியிலிருந்து அம்மாக்கண்ணு வைக்காதீர்கள் தன்னுடன் வாழ்தாவில் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று நீயாவது என பெயரிட்டு படிக்க வைத்தார்.
- காந்தியடிகள் கடலூாருக்கு ஒரு முறை வந்தபோது அவரை சந்திப்பதற்கு அஞ்சலை


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

அம்மாளுக்கு ஆங்கில அரசு தடை விதித்தது ஆனால் அஞ்சலை அம்மாள் பருதா வேடம் அணிந்து குதிரை வண்டியில் காந்திகளை ஏற்றி சென்றார் அதனால் காந்தியடிகள் அஞ்சலை மாலை தென்னாட்டின் ஜான்சி ராணி என்று அழைத்தார்.

⇒ **சங்க கால பெண்பாற் புலவர்கள்**

- ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார் ஆதிமந்தியார், வெண்ணிக்குயத்தியர், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினார். வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

⇒ **பக்தி இயக்கக் காலப் பெண்பாற் புலவர்கள்**

- காரைக்கால் அம்மையார், ஆண்டாள்.

### 3. அம்புஜத்தம்மாள்

- 08. 01.1899 இல் வசதியான குடும்பத்தில் பிறந்தார்.
- வீட்டிலேயே தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் என பல மொழிகளையும் திறம்பட பயின்றார்.
- அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தினால் ஈர்க்கப்பட்டு எளிமையாக வாழ்ந்தார்.
- கட்டுப்பாடான குடும்பத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு நாட்டு விடுதலைக்காக பாடுபட்டார்.
- வை.மு.கோதைநாயகி அம்மாள், ருக்குமணி, லட்சுமிபதி முதலியவர்களோடு நட்புக் கொண்டு பெண் அடிமைக்கு எதிராக குரல் கொடுத்தார்.
- பாரதியாரின் பாடல்களை பாடி விடுதலை உணர்வை ஊட்டினார். துணிகள் விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்தியதற்கு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.
- சிறையில் இருந்த போது மனம் தளராமல் தான் கற்ற மொழிகளை பிறருக்கு கற்றுக் கொடுத்தார்.
- காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று அம்புஜதம்மாள் அழைக்கப்பட்டார்.
- தன் செல்வாக்கையோ, தன் தந்தையின் செல்வாக்கையோ பயன்படுத்தாமல் நேர்மையாக வாழ்ந்து காட்டினார்.
- தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரை இணைத்து **சீனிவாச காந்தி நிலையம்** என்ற தொண்டு நிறுவனத்தை அமைத்தார்.
- 70 ஆண்டு நினைவாக **நான் கண்ட பாரதம்** என்னும் அரிய நூலை எழுதியுள்ளார்.
- 1964 ல் பத்மஸ்ரீ விருதினை பெற்றுள்ளார்.

⇒ **சாதனைப் பெண்மணிகள்**

#### 1. நீலாம்பிகை அம்மையார் ( 1903 – 1943 )

- இவர் மறைமலை அடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ் பற்று உடையவர்.
- இவரது தனித்தமிழ் கட்டுரை, வடசொல்–தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகளின் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோருக்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

#### 2. ஈ.த.ராஜேஸ்வரி அம்மையார் (1906 முதல் 1955 வரை)

- தமிழ் இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களில் உள்ள அறிவியல் உண்மைகள் குறித்து சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.
- ராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியராக பணியாற்றினார். சூரியன்,


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

பரமாணு புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

## 3. எம். எஸ்.சுப்புலட்சுமி (இசை கலைஞர்)

- மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி என்ற இவர் மதுரையில் பிறந்தவர்.
- இசை சூழலில் வளர்ந்தவர். வீணை இசை கலைஞரான இவருடைய தாயாரே முதல் குருவாக இருந்து இவருக்கு இசை கற்பித்தார்.
- 10 வயதில் இசை தட்டுக்காக பாடலை பாடி பதிவு செய்து சிறப்பு பெற்றவர் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே கல்வி பயின்றார்.
- தன்னுடைய 17ஆவது வயதில் சென்னை மியூசிக் அகாடமியில் மேதைகள் பலர் முன்னிலையில் கச்சேரி செய்து பாராட்டினை பெற்றவர்.
- இவர் நடித்த மீரா என்ற திரைப்படத்தின் மூலம் இந்தியா முழுவதும் இருந்து இவருக்கு பாராட்டுகள் கிடைத்தன.
- காற்றினிலே வரும் கீதம், பிருந்தாவனத்தில் கண்ணன் போன்ற பாடல்களுக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. சரோஜினி நாயுடு, ஜவஹர்லால் நேரு, காந்தியடிகள் போன்ற பெரியோர்கள் இவரை பாராட்டி உள்ளனர்.
- இசை பேரரசு என்ற பட்டத்தை நேரு இவருக்கு வழங்கினார். தில்லியில் காந்தியடிகளின் முன்னிலையில் ரகுபதி ராகவ ராஜாராம் என்ற பாடலை பாடி பாராட்டை பெற்றுள்ளார்.
- காந்தியடிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க **ஹரி தும் ஹரோ** என்ற மீரா பஜனை கற்றுக்கொண்டு 1947–ல் காந்தியடிகளின் பிறந்தநாள் அன்று வானொலியில் பாடலை பாடினார்.
- 1954இல் தாமரை அணி விரலை பத்மபூஷன் பெற்ற போது ஹெலன் கெல்லர் இவரை தொட்டு தழுவி பாராட்டினார்.
- 1963–ல் இங்கிலாந்திலும், 1966 ஐநா சபையிலும் பாடியுள்ளார். இவர் பாடிய வெங்கடேச சுப்ரபாதம் 1966–லிருந்து திருப்பதியில் ஒலிக்க தொடங்கியது.
- 1974–ல் மகசேசே விருதினைப் பெற்றார். இவ்விருதினை பெற்ற முதல் இசை கலைஞர் இவர் ஆவார்.
- இந்தியாவின் மிக உயரிய விருதான இந்திய மாமணி (பாரத ரத்னா) விருது இவருக்கு வழங்கப்பட்டு உள்ளது.
- தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி, மராத்தி, குஜராத்தி மற்றும் ஆங்கில மொழிகளில் இவர் பாடியுள்ளார்.

## 4. பால சரஸ்வதி (பரதநாட்டியக் கலைஞர்)

- பொது வெளியில் நடனம் ஆடுவது தண்டனைக்குரிய குற்றம் என்ற சட்டம் இயற்றப்பட்டிருந்த காலத்தில், தனது நடன வாழ்வை இவர் தொடங்கினார்.
- நாட்டியம் ஆடுவது கீழ்மையானது என்ற எண்ணம் பரவலாக இருந்த வந்த நிலைமையை மாற்றியவர்.
- 7 வயதாக இருந்தபோது காஞ்சிபுரத்தில் இவருடைய பரதநாட்டிய அரங்கேற்றம் நடந்தது.
- சென்னையில் இவருடைய பரதநாட்டியத்தை பார்த்து பாராட்டிய பண்டிட் ரவிச்சங்கர் வட இந்தியாவில் பல இடங்களில் இவருக்கு நாட்டியமாடும் வாய்ப்பினை பெற்று தந்தார்.
- கல்கத்தாவிலும், காசியில் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டிலும், சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கண்காட்சிலும் நம் தேசிய கீதமான ஜன கன மன பாடலுக்கு நாட்டியம் ஆடி உள்ளார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- டோக்கியோவில் நடந்த கிழக்கு மேற்கு சந்திப்பு நிகழ்வில் இந்தியாவின் சார்பாக கலந்து கொண்டு நடனம் ஆடியுள்ளார்.
- ஐரோப்பா, அமெரிக்க உள்ளிட்ட பல வெளிநாடுகளில் பரதநாட்டியத்தின் பெருமையை விளங்கச் செய்து மரபு சார் நாட்டியத்தை பலரும் வரவேற்குமாறு செய்தவர்.
- 1957–ல் தாமரையணி விருதினையும், 1977–ல் தாமரை செவ்வணி விருதினையும் (பத்மவிபூஷன்) பெற்றுள்ளார்.

### 5. ராஜன் கிருஷ்ணன் (எழுத்தாளர்)

- பெண் எழுத்தாளர்கள் என்றால் குடும்ப கதை எழுத வேண்டும் என்ற படிமத்தை உடைத்து சமூகப் பிரச்சினைகளை கதைகளாக எழுதியவர்.
- சமூகத்தில் இடர்பாடுகளை சந்திக்கும் மக்களை நேரில் சந்தித்து களப்பணியாற்றி அவர்களின் பிரச்சினைகளை வெளியுலகத்திற்கு தன் எழுத்துகளால் படம் பிடித்து காட்டினார்.
- புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், குறுநாவல், குழந்தை இலக்கியம், வரலாறு நூல் என அனைத்து தளங்களிலும் தடம் பதித்தவர்.
- இவர் எழுதிய **பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி** என்னும் வரலாற்று புதினம் அனைவராலும் பாராட்டப் பெற்றது.
- தூத்துக்குடியில் பல மாதங்கள் தங்கி இருந்து உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கையை **கரிப்பு மணிகள்** என்ற பெயரில் புதினமாக எழுதினார்.
- நீலகிரி படுகர் இன மக்களின் வாழ்க்கையை குறிஞ்சித்தேன் என்ற புதினமாக எழுதினார்.
- கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்களை **அலைவாய் கரையில்** என்ற புதினமாக எழுதினார்
- வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவது குறித்து **சேற்றில் மனிதர்கள்** மற்றும் **வேருக்கு நீர்** என்ற புதினங்களில் வெளிப்படுத்தி உள்ளார்.
- தீப்பெட்டி தொழிற்சாலைகளில் முடங்கிப் போய் இருக்கும் குழந்தைகளின் அவள வாழ்க்கையை **கூட்டுக்குஞ்சுகள்** என்ற புதினத்தில் வெளிப்படுத்தி உள்ளார்.
- **மண்ணகத்து பூந்துளிகள்** என்ற தலைப்பில் பெண் சிசுக்கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியுள்ளார்.
- 1973– இல் **வேருக்கு நீர்** என்ற புதினத்திற்காக இவருக்கு **சாகித்திய அகாதமி விருது** கிடைத்தது.

### 6. கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் (சமூகப்போராளி)

- நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் இருந்து சமூக அவலங்களை களைவதற்காக போராடியவர் கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்.
- இவர் மதுரையின் முதல் பட்டதாரி ஆவார். காந்தி சிந்தனையில் கவரப்பட்டு சர்வதேச இயக்கத்தில் சேர்ந்து களப்பணி ஆற்றியவர்.
- **காந்தியடிகள்** மற்றும் **வினோபா பாவே** ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.
- ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றவர்.
- நாட்டின் விடுதலைக்கு பின் கணவருடன் இணைந்து **பூதான இயக்கத்தில்** பணி புரிந்தார்.

⇒ **இவர் பெற்ற விருதுகள்**

இந்திய அரசின் **தாமரைத் திரு விருது (பத்மஸ்ரீ),**

சுவீடன் அரசின் **வாழ்வுரிமை விருது,**

சுவிட்சர்லாந்து அரசின் **காந்தி அமைதி விருது.**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

## 7. சின்னப்பிள்ளை (மகளிர் மேம்பாட்டாளர்)

- பெண்களின் வாழ்க்கை மேம்படுத்துவதற்கு தன்னுடைய முதுமை பருவத்திலும் இடைவிடாது உழைப்பவர் சின்னபிள்ளை.
- இவர் பெண்கள் குழு ஒன்றை அமைத்தார். பெண்களுக்கு வேலைவாய்ப்பினையும் வருமானத்தையும் தரக்கூடிய விவசாய தொழிலை அக்குழு மூலமாக செய்தார்.
- இவருடைய கடின உழைப்பை கண்ட மதுரை மாவட்ட ஆட்சியர் கன்மாயில் மீன் பிடிக்கும் குத்தகையை குழுவிற்கு வழங்கினார்.
- இவர் களஞ்சியம் என்ற பெயரில் 10 பெண்களுடன் ஆரம்பித்த மகளிர் குழு இன்று பல மாநிலங்களில் பரவியுள்ளது. பல குடும்பங்களுக்கு இக்குழுவே வருமானத்திற்கு வழிவகை செய்துள்ளது.
- 2004–இல் சுனாமி பாதிப்படைந்த இடங்களுக்குச் சென்று மீட்பு பணிகளை இக்குழு செய்தது.

⇒ **இவர் பெற்ற விருதுகள்**

- முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருதினை, **(ஸ்ரீ சக்தி புரஸ்கார் விருது)** பெற்றார்.
- தமிழக அரசின் அவ்வை விருது, துார்தர்சனின் பொதிகை விருது, மத்திய அரசின் **தாமரை திரி விருது (பத்மஸ்ரீ).**
- விருது வழங்கும் விழாவில் வாஜ்பாய் அவர்கள் சின்னப் பிள்ளையின் காலில் வந்து விழுந்து வணங்கினார்.

⇒ **சாதனை புரிந்த திருநங்கைகள்**

### 1) நர்த்தகி நடராஜ்

- தன்னுடைய நடன திறமையால் அமெரிக்கா, லண்டன், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பயணித்து தம் பரதத்தால் பல்லாயிரம் மேடைகளை உயிரோட்டமாக மாற்றி வருகிறார்.
- தஞ்சை கிட்டப்பாவிடம் பரதம் பயின்றவர் நர்த்தகி என்ற பெயரை கிட்டப்பாவே இவருக்கு சூட்டினார்.
- திருவாசகம், தேவாரம், திருக்குறள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு பரத நிகழ்ச்சிகளை இவர் நடத்துகிறார்.
- **சாதனைகள் திருநங்கை** என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர்.
- திருநங்கைகளுள் முதன்முதல் கடவுச்சீட்டு, தேசிய விருது, மதிப்பு முனைவர் பட்டம் பெற்றவர்.

⇒ **விருதுகள்**

- ❖ தமிழக அரசின் கலைமாமணி விருது
- ❖ இந்திய அரசின் சங்கீத நாடக அகாடமி விருது
- ❖ இந்திய அரசு தொலைக்காட்சியின் **ஏ கிரேடு கலைஞர்**
- ❖ இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் **சிறந்த கலைஞர்**
- ❖ பெரியார் பல்கலைக்கழகத்தின் மதிப்பு **முனைவர் பட்டம்**
- ❖ இந்திய அரசின் **பத்மஸ்ரீ** விருதினை பெற்ற முதல் திருநங்கை ஆவார்.

### 2) பிரித்திகாயாஷினி

- சேலத்தைச் சேர்ந்த இவர், மிகுந்த இன்னல்களுக்கு இடையே 2017–ல் கணினி பாடப் பிரிவில் இளநிலை பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.
- இவர் தற்போது சென்னையில் காவல்துறையின் சட்டம் ஒழுங்கு பிரிவில் பணியாற்றி வருகிறார்.

www.tnpscgroup4.in

- இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர் என்ற பெருமை இவரை சாரும்.

**3) ஜோயிதா மோண்டல் மாஹி**

- மேற்கு வங்கத்தைச் சேர்ந்த இவர் திருநங்கைகளின் முன்னேற்றத்திற்காக பணியாற்றி வருகிறார்.
- வடக்கு திணாஜ்பூர் மாவட்டம் இஸ்லாம்பூரில் லோக் அதலாத் நீதிபதியாக அண்மையில் நியமிக்கப்பட்டார்.
- நீதிபதியாக திருநங்கை ஒருவர் நியமிக்கப்பட்டது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.

**4) தாரிகா**

- தமிழ்நாட்டில் மூன்றாம் பாலின பிரிவில் பள்ளி படிப்பை முடித்த முதலாமவர்.
- இவர் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அம்பத்தூரில் காமராஜர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் பாடப் பிரிவில் பயின்று 2017 மேல்நிலைப் பொது தேர்வில் வெற்றி பெற்றார்.
- தற்போது அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்று வருகிறார்.

www.tnpscgroup4.in